பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 20 | வெள்ளிக்கிழமை | 05.12.2025 | அதிர்வு 127

## பேரிடர் சாவு எண்ணிக்கை 486 ஆக உயர்வு



இலங்கையில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 486 ஆக உயர்ந்துள்ளது. 06






# தையிட்டியில் நேற்று பொலிஸ் அராஜகம்!

## எதற்கும் அஞ்சாது திஸ்ஸ விகாரைக்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அங்கிருந்த போராட்டக்காரர்களின் கூடாரங்களைப் பொலிஸார் அகற்றி அராஜகம் புரிந்தனர். 06




# யாழில் இந்தியத் துணைத் தூதரை சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சியினர்

## அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பில் கலந்தாய்வு என்கிறார் சுரேஷ்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று புதன்கிழமை துணைத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

சூறாவளி, வெள்ளப்பெருக்கு காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் 06




உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு விட்டால் தாங்கள் ஏதோ சிற்றூர் ராஜாக்கள் அல்லது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மட்டத்தில் இருப்பவர்கள் என்று சிலருக்கு எண்ணம் பிறந்து விடுகின்றது போலும்.

பல உள்ளூராட்சி தலைவர்கள் தொடர்பில் அத்தகைய முறைப்பாடுகள்தான் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவர்கள் தரைக்கும் வானுக்கும் குதிக்கும் அதிகாரம் தங்களுக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு துள்ளுகிறார்கள்.

மன்னார் மாவட்டத்தில் ஓர் உள்ளூராட்சி சபை (மன்னார் நகர சபை அல்ல) தலைவரின் நடத்தை குறித்து வந்த தகவல் இது. இச்சம்பவம் பேரிடருக்கு முன்னர் – கடந்த மாதத்தில் – நடந்தது.

அந்தப் பிரதேச சபைத் தவிசாளரின் எதேச்சாதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாவட்டச் செயலாளர் வரையில் முறையிட்டு ஆளுநரின் கவனத்திற்கு இப்போது கொண்டு செல்லப்பட்டதாக அறிய வருகின்றது..

அந்தப் பிரதேச சபைப் பகுதியில் 06



# வெள்ளப் பேரிடரின் பின்னர் வவுனியா நகரப் பிரதேசத்தில் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் விசேட வேலைத் திட்டம்

(கி.வசந்தன்)

வெள்ளப் பேரிடரின் பின்னர் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரதலைமையில்இவ்வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வெள்ளப் பேரிடரின் காரணமாக வவுனியாவின் பல்வேறு வீதிகள், வடிகால்களில் குப்பைக் கூளங்கள், போத்தல்கள், பொலித்தீன்கள், பிளாஸாரிக் பொருள்கள், ரயர்கள், உள்ளிட்டவை தேங்கியும் படிந்தும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக பெய்து வருகின்ற மழையினால் வெள்ளநீர் தேங்கி நின்று டெங்கு, மலேரியா நுளம்பு பெருகின்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளது. வீதிகளும் சுத்தமற்றவையாகவும் காணப்படுகின்றன.

இந்த விசேட வேலை திட்டத்தின் கீழ் வீதிகளையும் வடிகால்களையும் துப்புரவு செய்கின்ற பணி வவுனியா நகரம் மற்றும் செட்டிகுளம் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார பிரிவினர், சுகாதார பரிசோதகர்கள், வவுனியா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொலிஸார், சமுதாய பொலிஸ் குழுவினர், வவுனியா பல்கலைக் கழகத்தினர், மலேரியா தடை இயக்கத்தினர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் உள்ளிட்ட பலர் இணைந்து இந்த வேலை திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வேலை திட்டங்களை மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பார்வையிட்டு வருகின்றனர்.
















# நுவரெலியா ரேஸ்கோர்ஸ் குடியிருப்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருள்கள்

**(ஆர்.எவ்.எம்.சுஹெறல்)**

இலங்கையைத் தாக்கிய பேரழிவு வெள்ளத்தால் வீடுகள் முற்றிலுமாக நீரில் மூழ்கிய நுவரெலியா ரேஸ்கோர்ஸ் குடியிருப்பின் அனைத்துக் குடும்பங்களுக்கும் போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர் மற்றும் அத்தியாவசிய ஆடைகளை விநியோகிக்கும் பணி, நுவரெலியா தலைமையக பொலிஸ் தலைமை இன்ஸ்பெக்டர் பி.எஸ்.சி.சஞ்சீவ தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

நுவரெலியா பொலிஸ் மூத்த அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட நண்பர்கள் மற்றும் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மற்றும் முடிந்தவரை பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவிகளுடன் இந்த நிவாரணப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இங்கு, நுவரெலியா ரேஸ்கோர்ஸ் குடியிருப்பில் வசிக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர், பள்ளி சீருடைகள் மற்றும் அத்தியாவசிய ஆடைகள் விநியோகிக்கப்பட்டன.

இதற்காக, நுவரெலியா பொலிஸ் தலைமை இன்ஸ்பெக்டர் பி.எஸ்.சி.சஞ்சீவ, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இந்துனில் பிரேமலால், நுவரெலியா பொலிஸ் துறைத் அதிகாரிகள் மற்றும் பல நன்கொடையாளர்கள் கலந்து கொண்டனர்.

















# தம்பலகாமத்தில் காணாமல் போன வீதி

(ஏ.எச்.ஹஸ்பர்)

கனமழை காரணமாக நீரில் மூழ்கிய தாயிப் நகர் தம்பலகாமம் ஊடாக கோயிலடி வைத்தியசாலை செல்லும் பிரதான வீதியை புனரமைத்து தருமாறு பாதசாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதி ஏற்கனவே சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்பட்ட நிலையில் தற்போது ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலையின் பின் அதுவும் காணாமல் போயுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வெள்ள நீர் வடிந்தோடி, மக்களின் இயல்பு நிலை வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் குறித்தவீதிப்ப்குதியைப்பலர்பயன்படுத்தியும் வருகின்றனர்.

இந்த வீதியின் இரு புறங்களிலும் காபட் பாதையானது நான்கு கிலோ மீற்றர் வரை காணப்பட்டாலும், ஒரு பகுதி முற்றாக நாசமாகியுள்ளமையால் இவ்வீதி ஊடாக பயணிக்க முடியாது பல்வேறு அசௌகரியங்களை தாங்கள் எதிர் நோக்குகின்றனர் என இவ்வீதி ஊடாகப் பயணிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்

இந்த வீதியை ஒட்டியே தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை, பாடசாலை போன்றன காணப்படுகின்றன. தினமும் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள்,பொது மக்கள், அரச அதிகாரிகள் எனப் பல நூற்றுக் கணக்காணவர்கள் கிண்ணியா, கந்தளாய் தம்பலகாமம் போன்ற பகுதிகளுக்கு செல்வதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கனமழை காரணமாகவும் சீரற்ற கால நிலையின் தாக்கம் காரணமாக முழுமையாக சேதமடைந்த இவ் வீதியை உடனடியாக புனரமைப்புச் செய்து தருமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் இவ் வீதி ஊடாக பயணிப்போர் கோரிக்கை விடுக்கின்றனர்.







# பெரியகல்லாறில் கரை ஒதுங்கிய பெண்ணின் சடலம்

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு கடற்கரை பகுதியில் அடையாளம் காணப்படாத பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இந்தச் சடலம் கரையொதுங்கியது தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 60வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு ஒதுங்கியுள்ளது.

அந்த இடத்துக்கு வருகைதந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நீதிவான் நீதிமன்ற அனுமதியைப்பெற்று சடலத்தினை பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





# புத்தளம் – அ'புர வீதியில் உடைந்த பாலத்திற்கு பதிலாகப் புதிதாக இரும்புப் பாலம் ஸ்தாபிப்பு!





(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புத்தளம் – அநுராதபுரம் பிரதான வீதியில் 9ஆவது மைல் கல்லில் இடிந்து விழுந்த கொன்கிரீட் பாலத்திற்கு பதிலாக புதிய இரும்பு பாலம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் வீதி மேம்பாட்டு அதிகாரசபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

நிலவிய மோசமான வானிலை காரணமாக பாலம் இடிந்து விழுந்தது.

இதன் காரணமாக, புத்தளம்–அனுராதபுரம் வீதியில் அனைத்துப் போக்குவரத்தும் ஸ்தம்பித்தது.

புதிய பாலத்தின் விரைவான கட்டுமானத்திற்காக இராணுவ வீரர்கள், கருவலகஸ்வெவ பிரதேச செயலகம் மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகம் ஆகியவை வீதி மேம்பாட்டு அதிகாரசபைக்கு உதவி செய்தன.

இதன்மூலம் புதிய பாலம் புனரமைக்கப்பட்டு, போக்குவரத்துப் பாவனைக்கு வீதி திறந்து விடப்பட்டுள்ளதாகப் புத்தளம் வீதி மேம்பாட்டு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்டாலிகளாக திரிந்த கால்நடைகள் பல வற்றை பிரதேச சபை பிடித்துள்ளது. அது அவர்களின் பணிதான். செய்ய வேண்டியதுதான். அதனைப் பிடிக்கலாம், ஆனால் பிடித்த மாடுகளை எவரது அனும தியும் இன்றி பாடசாலையில் கொண்டு சென்று பாடசாலை வளாகத்துக்குள் அடைத்துள்ளனர். இவற்றை அறிந்திராத பாடசாலை ஆசிரியை ஒருவர் பாடசாலைக் குச் சென்ற சமயம் பாடசாலையின உள்ளே சுமார் 25 மாடுகள் கூட்டமாக நிற்பதனை அவதானித்து அவற்றை விரட்டி வாசல் கதவினை அடைத்துள்ளார்.

இதனை அறிந்த பிரதேச சபை தவிசா ளர் சபையின் பொதுச் சுகாதார உத்தியோ கத்தர்களை ஏவி, அந்த ஊரிலே அந்த ஆசிரியருக்கு எதிராக மட்டும் நுளம்புப் பெருக்கத்திற்கு எதிரான சட்டத்தின் கீழ் வழக்கைத் தாக்கல் செய்யப் பண்ணி யிருக்கின்றார்.

இந்த விடயம் உடனடியாகப் பாட சாலை அதிபரின் ஊடாக மடு வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் மாவட்ட அரச அதிபரிடம் விவரம் தெரிவித்துள்ளார்.

இவற்றையடுத்து விடயம் ஆளுநர் வரைகொண்டுசெல்லப்பட்டதோடு, மாவட்ட அரச அதிபர் கலந்துரையாடி, கடமையைச் செய்த ஆசிரியரை வேண்டுமென்றே பழிவாங்க இன்னுமோர் நிர்வாக இயந் திரத்தைப் பயன்படுத்துவது பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும், எனவே வழக்கை மீளப் பெறுமாறு அறிவுறுத்தி யதன் பின்னர் வழக்கு மீளப் பெறப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

அதிகாரம் வந்து விட்டால் பல சமயங்க ளில் கண்மண் தெரிவதில்லை. அதிகா ரம் கண்ணை மறைத்து விட தலை பெருத்து விடுகின்றது....!

## யாழில் இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்பாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் தார்.

சந்திப்பு தொடர்பாக யாழ். ஊடக அமை யத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போது சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், அதற்கு எவ்வா றான நிவாரணங்களைக் கொடுப்பது பற்றியும், முல்லைத்தீவு, மன்னாரில் ஏற் பட்டுள்ள மிகப் பாரதூரமான இழப்புக்க ளுக்கு உடனடியாக என்ன செய்வது என் பது தொடர்பாகவும், இரண்டாவது கட்ட மாக என்ன செய்வது எனவும் பல விட யங்களை இந்தச் சந்திப்பில் ஆலோசித்து இருந்தோம்.

வடக்கு மாகாண மக்களின் தேவை களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத் தையும் சமர்ப்பித்ததுடன் அதன் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை எதிர் காலத்தில் பாரிய பாதிப்புகள் வருவதில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாகவும், இப்போதுள்ள நிலை மைகளைச் சீர்செய்வது தொடர்பாகவும் பேசியிருந்தோம்.

இந்த அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் இந்திய அரசாங்கத்தால் கொழும்பு ஊடா கவும் திருகோணமலை ஊடாகவும் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் கொண்டுவரப்பட்டமைக்குத் தமிழ் மக் கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித் தோம்.

விவசாயம் பெருமளவில் பாதிக்கப் பட்டு இருக்கின்றது. அடுத்த மாதங்க ளில் நிச்சயமாகப் பொருளாதார பின் னடைவைச் சந்திக்கவிருக்கின்றோம். வடக்கில் வெள்ளத்தால் ஆயிரக்கணக் கான கால்நடைகள் இறந்திருக்கின்றன. அதனுடைய முழுமையான விவரங்கள் இதுவரை தெரியாது. அந்த விவசாயிகள், பண்ணையாளர்களுக்குப் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனை மீள உருவாக்கு வதற்கான வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டும்.

வன்னி மக்கள் இத்தனை வருடத்தில் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தவர்கள். இந்தநிலையில் அவர்கள் மீண்டும் மீண்டும் இடப்பெயர்வுக்கு உள்ளாகு வது என்பது ஒரு பெரிய ஒரு சுமை. அவர் களுக்கு உதவுவதற்கு இந்தியா செயற்பட வேண்டும். அதற்கு இந்தியா முன்வந்தி ருக்கின்றது.

தமிழகத்தினுடைய முதல்வர் ஸ்டாலின் தாங்களும் உதவி செய்வதற்குத் தயா ராக இருப்பதாகக் கூறி இருப்பதால் ஈழத் தமிழர் சார்பாக நாங்கள் அந்த உதவி யையும் வரவேற்கின்றோம்.

பல கோடி ரூபாவுக்கு மேல் இழப்புக் கள் ஏற்படுள்ளன என்று அரசாங்கம் தெரிவிக்கின்றது. வீதிகள், பாலங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியா எல்லோருக்கும் முன்பாக நட்பு நாடாக எமக்கு உதவி செய்திருக்கின் றது. அதற்கு நன்றி சொன்னதுடன் மேற் கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம்." – என்றார்.

## வெள்ளத்தின் பின்னர் வெளிவந்த கைக்குண்டுகள்

(கனகராசா சரவணன்)

திருகோணமலை மாவட்டம், கிண் ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டல் காடு என்ற பகுதியில் புதைக்கப்பட்டி ருந்த கைக்குண்டுகள் மற்றும் வெடி பொருள்கள் என்பன கண்டுபிடிக்கப் பட்டன என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பகுதியில், தரையில் வெளிப்பட்டிருந்த பிளாஸ்டிக் கொள்கலன் மற்றும் பிளாஸ் டிக் பீப்பாயில் அந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு கொள்கலன்களிலும் 109 கைக்குண்டுகள் மற்றும் எல்.எம்.ஜி. துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்று சந்தேகிக்கப்படும் 1,678 வெடி மருந்துகள் காணப்பட்டன என்று பொலி ஸார் கூறியுள்ளனர்..



இந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவர் அளித்த தகவலின் அடிப்படையில், இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

சம்பவ இடத்துக்குப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை வரவழைத்த கிண்ணியா பொலிஸார், சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## வெள்ள பாதிப்பு காரணமாக முட்டைகளுக்கு தட்டுப்பாடு

வெள்ளத்தில் கோழிகள் அதிக அள வில் இறந்ததால், எதிர்காலத்தில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பேக்கரி உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்தன இதனைத் தெரிவித் துள்ளார்.

முட்டைகளின் விலை ஏற்கனவே அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

மேலும், இது பண்டிகைக் காலத்தில் கேக்குகளின் உற்பத்தியை பாதிக்கக் கூடும் என நேற்று நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பின் போது அவர் கூறி யுள்ளார்.

## பேரிடர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேலும், 341 பேர் காணாமல்போயுள் ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, 5 இலட்சத்து 19 ஆயிரத்து 842குடும்பங்களைச்சேர்ந்த18இலட்சத்து 44 ஆயிரத்து 55 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர் என்றும், அவர்களில் 51 ஆயிரத்து 23 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட் சத்து 71 ஆயிரத்து 778 பேர் நாடு முழு வதும் அமைக்கப்பட்டுள்ள 1,231 பாது காப்பு மையங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத் துவ நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தையிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக் கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற் றுமாறு வலியுறுத்தியும், திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி, அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமை யாளர்களிடம் மீளவும் வழங்குமாறு கோரி யும்தமிழ்த்தேசியமக்கள்முன்னணிபாதிக் கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுக்கும் தொடர் போராட்டம் பௌர்ணமி தினமான நேற்றும் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் நடத்தப்பட்டபோதே போராட்டக்கா ரர்களின் கூடாரங்களைப் பொலிஸார் அகற்றினர்.

இதையடுத்துப் பொலிஸாரின் அரா ஜகச் செயலுக்கு எதிராகப் போராட்டக் காரர்கள் கோஷமிட்டனர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

எனினும், நேற்றுக் காலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மாலை 6 மணி வரை மக்களால் தொடர்ந்து முன் னெடுக்கப்பட்டது.



# காலி, குருநாகல் பகுதியில் உள்ள பாலங்களில் சிக்கியுள்ள பொருள்களை அகற்ற நடவடிக்கை

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

வெள்ள அபாயத்தைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கிங் கங்கையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களில், தண்ணீர் சீராக செல்வதைத் தடுக்கும் வகையில் தேங்கியிருக்கும் பொருள்களை அகற்றும் நடவடிக்கையையும் காலி மற்றும் குருநாகல் மாணிங்கமுவ பாலங்களில் சிக்கியிருந்த பொருள்களை அகற்றும் நடவடிக்கையையும் கடற்படையினர் நேற்று வியாழக்கிழமை மேற்கொண்டனர்.

கடும் மழை காரணமாக காலி பிரதேசத்தில் உள்ள கிங் கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்தது. குப்பைகள், மரக்குச்சிகள், மூங்கில் புதர்கள் மற்றும் குப்பைகள் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு தேங்குவதால் ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு கடற்படையினர் தொடர்ந்து பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

இதன்படி, தெற்கு கடற்படை கட்டளை மற்றும் மேற்கு கடற்படை கட்டளை பிரிவினரால் விசேட சுழியோடி குழுக்களை ஈடுபடுத்தி பாலங்களில் தேங்கியிருந்த குப்பைகள், மரக்கட்டைகள், மூங்கில் புதர்கள் உட்பட பெருமளவான எச்சங்கள் அகற்றப்பட்டு நீர் சீரான முறையில் வெளியேறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.










நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வறுமையை ஒழிப்போம்!

‘பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை’ பற்றி அடிக்கடி குறிப்பிடுவோம்.

ஏற்கனவே வெளிநாட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாமல் வங்குறோத்து நிலையை அடைந்து அல்லற் பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை, மோசமான அந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளெழ முடியாமக் தடுமாறிக் கொண்டிருக்கும் சமயத்தில் மற்றொரு பெரும் பின்னடைவாக இந்தப் பேரிடர் தாக்கமும் பேரிடியாக வந்து சேர்ந்திருக்கின்றது.

பொருளாதாரப் பாதிப்பை எதிர் கொண்டிருக்கும் இலங்கைக்கு இந்தப் பேரிடர் இழப்புக்கள் மேலும் பின்னடைவைத் தந்திருக்கின்றன.

அதுவும் 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளாதிருக்கும் இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களின் வாழ்வியல் போராட்டத்தை இந்தச் சூறாவளிப் பேரிடர் மேலும் ஆழமாக்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் வறுமை நிலைமை இரண்டு மடங்கிற்கும் அதிகமாக, 11.3 வீதத்திலிருந்து 24.5 வீதமாக, உயர்ந்துள்ளது என்று உலக வங்கியின் 2025 ஆம் ஆண்டு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

உலக வங்கியின் அறிக்கைகளின்படி, 2026 வரை வறுமை விகிதம் 22 வீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்வு கூறப்பட்டது. ஆனால் இப்போதைய பேரிடரால் ஏற்பட்ட இழப்புகளும் வாழ்வாதாரப் பாதிப்புகளும் நாட்டின் வறுமை நிலைமையை மேலும் மோசமடையச் செய்யப் போகின்றன என்பது திண்ணம்.

பொருளாதார நெருக்கடி, வேலை இழப்பு, உயர் பணவீக்கம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் குறைபாடுகள் ஆகியவை வறுமை அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக முன்னர் கூறப்பட்டன. அவற்றோடு பேரிடியாக பேரிடர் இழப்புகளின் பாதிப்புகளும், பின்னடைவுகளும் சேர நாட்டின் வறுமை நிலைமை முன்னர் இல்லாத உச்சத்தைத் தொடும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

இந்தப் பேரிடர் அனர்த்தங்களும் அவை ஏற்படுத்திய வாழ்வாதார இழப்புகளும் விளிம்பு நிலை மக்களை வறுமை நிலைக்குள் நிரந்தரமாக தள்ளிவிடும் ஆபத்தான சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

பேரிடரால் நாட்டுக்கு நேர்ந்த கட்டுமான இழப்புகளைச் சீர் செய்யும் அதே நேரத்தில், குடும்பங்கள் ஒவ்வொன்றும் இழந்த வாழ்வாதாரங்களை அவை மீள பெற்றுக் கொள்வதற்கான திட்டமிட்ட பொறிமுறைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் மூலம் குடும்பங்கள் வறுமை நிலைக்குள் விழுவதினின்றும் மீட்டெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொடர்ந்தும் உதவிகள், நிவாரணங்கள், மானியங்கள் என்று வழங்கி குடும்பங்களைத் தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் - வறுமைக் கோட்டுக்குள் - வைத்திருக்காமல், அவற்றை அதிலிருந்து மீட்டெடுத்து, நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களும் இந்த பேரிடர் மீட்சி ஒழுங்கு முறைக்குள் முக்கியமாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.




# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 3 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கத்தினால்விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் வலுசக்தித் துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதியுதவி நாட்டில் மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோக செயன்முறைகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக மாற்ற உதவுமென கூறப்பட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு தலா 02 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

# தகவல் தொடர்பை பேணுவதற்கு ஒத்துழைக்குமாறு ஸ்ரீலங்கா டெலிகொம் பொதுமக்களிடம் கோரிக்கை




சீரற்ற வானிலையால் பல்வேறு பகுதிகளில் அறுந்து வீழ்ந்துள்ள டெலிகொம் Fiber Cable மற்றும் செப்புக் கம்பிகளை அப்புறப்படுத்தவோ அல்லது வெட்டவோ வேண்டாம் என ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த Cable மற்றும் கம்பிகள் அறுந்து வீழ்ந்துள்ள போதிலும் அவை செயற்பாட்டில் உள்ளதாக டெலிகொம் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வீதிகளை சுத்தம் செய்யும்போது வீழ்ந்துள்ள கேபிள்களை அகற்றுதல் அல்லது வெட்டுதல் போன்ற சம்பவங்களால் பல நகரங்களில் தகவல் தொடர்பு தடைகள் ஏற்படும் சம்பவங்கள் தற்போது பதிவாகி வருவதாக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நெருக்கடியான சூழலில் தொலைத்தொடர்பு Fiber Cable-கள் மற்றும் செப்பு கம்பிகளுக்கு சேதம் ஏற்படுத்தாமல் இருப்பதன் ஊடாக சிறந்த தகவல் தொடர்பைப் பேணுவதற்கு ஒத்துழைக்குமாறு ஸ்ரீலங்கா டெலிகொம் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

# தொற்றுநோய் குறித்து சுகாதார பிரிவு விளக்கம்




நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளை தொடர்ந்து தொற்றுநோய்கள் பரவும் அபாயம் குறித்து சுகாதார பிரிவு விளக்கமளித்துள்ளது.

05 விதமான தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அதுல லியன பத்திரன தெரிவித்துள்ளார்.

நீரின் மூலம் பரவும் நோய்கள், எலி காய்ச்சல், சுவாச நோய்கள், தோல் நோய்கள் மற்றும் நுளம்புகளால் பரவக்கூடிய டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நோய் நிலைமைகளால் இரத்தத்துடன் கூடிய வயிற்றுப்போக்கினால் வலிழனை மற்றும் உநியவவைளை ஏற்படக்கூடுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றை தடுக்கும் விதமாக, கொதித்தாறிய சுத்தமான குடிநீரை பருக வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

அத்துடன், வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி போன்ற நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், உணவுகளை தயாரிப்பது மற்றும் விநியோகிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டுமெனவும் அவர் வலியுத்தினார்.

தமக்கு ஏற்பட்டிருக்கும் நோய் நிலைமைகள் தொடர்பில் கண்டறிந்து உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமெனவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அத்துல லியன பத்திரன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடரும்



நாட்டின் சில பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல், கேகாலை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை, அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை நிலைபெற்றதன் காரணமாக மிதமாக மழை பெய்யும் என வளியமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், அடுத்து வரும் நாள்களில் மாலை வேளைகளில் மத்திய, மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.



# மின்னல் தாக்கம் குறித்து கடுமையான எச்சரிக்கை

நாட்டின் சில மாவட்டங்களுக்குக் கடுமையான மின்னல் தாக்கம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் கடுமையான மின்னல் , இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.

மேலும், மின்னல் அபாயத்தைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறுவளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

# 269 சுற்றுலாப் பயணிகள் அனர்த்தங்களால் பாதிப்பு



இலங்கையில் நிலவிய அதிதீவிர காலநிலை காரணமாக 269 சுற்றுலாப் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவர்களில் 52 இந்தியர்கள் மற்றும் 40 பல்கேரிய நாட்டவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தற்போது பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுற்றுலாத் தளங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் கூறியுள்ளது.



# சிலாபம் – புத்தளம் பாலத்தை சீரமைக்கும் இந்திய இராணுவம்

"டித்வா" புயலால் சேதமடைந்த சிலாபம் – புத்தளம் வீதியை இணைக்கும் பாலத்தை மீளச் சீரமைக்கும் பணியை இந்திய இராணுவப் படைப்பிரிவின் களப் பொறியியலாளர்கள் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த இந்த குழு நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்ததாகவும், நேற்று காலை 7:30 அளவில் தங்கள் சரக்குகளை இறக்கும் பணிகளை நிறைவு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற அவர்கள், பாலத்தின் சேதங்களை ஆய்வு செய்ததுடன்,. ஆய்வுகளைத் தொடர்ந்து, சீரமைப்புப் பணிகளை விரைவில் தொடங்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையேயான வலுவான ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையில், அனர்த்தத்தின்போது சேதமடைந்த முக்கிய உட்கட்டமைப்புகளைச் சீரமைப்பதில் இந்திய இராணுவத்தின் நேரடிப் பங்களிப்பு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# ஜப்பான் பேரிடர் நிவாரண மருத்துவக் குழு வருகை

அவசர மனிதாபிமான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில், மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், நிவாரணப் பணியாளர்கள் மற்றும் மீட்பு வல்லுநர்கள் அடங்கிய ஜப்பான் பேரிடர் நிவாரண மருத்துவக் குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்தது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவைத் தொடர்ந்து இலங்கையுடனான தமது தொடர்ச்சியான ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக, அவசர கால மனிதாபிமான நடவடிக்கைகளை வலுப்படுத்த ஜப்பான் இந்த பேரிடர் நிவாரண மருத்துவக் குழுவை அனுப்பிவைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், நிவாரணப் பணியாளர்கள் மற்றும் மீட்பு வல்லுநர்கள் அடங்கிய 27 பேர் கொண்ட இந்தக் குழு நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்தது.

இது இலங்கையின் தற்போதைய அனர்த்த பதிலளிப்பு மற்றும் மருத்துவ உதவி முயற்சிகளுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

முன்னதாக நான்கு பேர் அனுப்பப்பட்ட நிலையில், மொத்தமாக 31 பணியாளர்கள் தற்போது இலங்கையின் சூறாவளிக்குப் பிந்தைய நிவாரண முயற்சிகளை ஆதரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

ஜப்பான் தூதுக்குழுவை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர். கிரிஷாந்த அபயசேன, வெளிவிவகார அமைச்சின் கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சவித்திரி பணபோக்க, மற்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன ஆகியோர் உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் இஸோமாட்டா அகியோ, ஜப்பான்

தொடர்ச்சி▼






















# ஜப்பான் பேரிடர் நிவாரண மருத்துவக் குழு வருகை

தொடர்ச்சி▲

பேரிடர் நிவாரண மருத்துவக் குழுவின் தலைவர் கியிச்சிரோ இவாசேயுடன் இணைந்து, மருத்துவர்கள், வைத்தியர்கள், நிவாரண, மீட்புப் பணியாளர்கள் உள்ளிட்ட 27 பேர் கொண்ட குழுவினரை இலங்கை அதிகாரிகளிடம் முறையாகக் கையளித்தார்.

இந்த மருத்துவக் குழுவானது தேசிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து களத்தில் முக்கியமான மருத்துவ ஆதரவை வழங்குதல், நிவாரண நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல், சூறாவளியால் சுகாதார சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவி வழங்குதல் முதலிய பகுதிகளை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.









# ஜனாதிபதிக்கும் கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு

கைத்தொழில் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றது.

அனர்த்தம் காரணமாக கைத்தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த புள்ளிவிவரங்களை அதிகாரிகள் இதன்போது சமர்ப்பித்ததுடன், கைத்தொழில் துறையை மீட்டெடுப்பதற்கான பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில், கைத்தொழில் துறையினருக்கு வழங்கக்கூடிய நிவாரணங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.













# நிவாரணப் பொருள்களை வழங்கியது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் வகையில், ஜப்பான் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட அவசர நிவாரணப் பொருள்கள், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

நாட்டிற்கு நேற்று முன்தினம் வந்தடைந்த இந்த நிவாரண உதவி, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் **Akio Isomata** மற்றும் ஜய்கா **(JICA)** இலங்கை தலைமை பிரதிநிதி **Kenji Kuronuma** ஆகியோரால் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அனர்த்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கவும் அவர்களின் அடிப்படை வாழ்க்கை நிலைமைகளை மீட்டெடுப்பதற்கும் தேவையான பல்வேறு அத்தியாவசிய மனிதாபிமான பொருட்கள் இதில் அடங்குகின்றன.

அத்துடன், 200 கூடாரங்கள், 1,200 போர்வைகள், 1,200 மெத்தைகள், 20 ப்ளாஸ்டிக் ஷீட்கள், 200 சிறிய நீர் கொள்கலன்கள் மற்றும் 10 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் இதில் அடங்குகின்றன.

இந்தப் பொருள்கள் பதுளை மற்றும் கண்டி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.















# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் உணவு வழங்கினர்

யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு கற்கோவளம் பகுதியில் அண்மைய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லங்குளம் இராணுவத்தினரால் சமைத்த உணவு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

எல்லங்குளம் இராணுவ அதிகாரி மேஜர் எச்.என்.பி.சி. பண்டார தலைமையிலான இராணுவ அதிகாரிகள் கற்கோவளம் பகுதிக்கு நேரடியாக சென்று உணவுப்பொதிகளை வழங்கிவைத்தார்.

இதில் கற்கோவளம் கிராம சேவகர் சிவாஜினியும் பங்கேற்றிருந்தார்.














# பருத்தித்துறை வர்தத்தக சங்க ஏற்பாட்டில் வன்னி மக்களுக்கு உலருணவுப் பொதிகள்

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு மக்களுக்கு பருத்தித்துறை வர்தத்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வர்தத்தக சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வெள்ள நிவாரண உதவு திட்டத்தில்

பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவைச் சங்கத்தினர் மற்றும் ஓடக்கரை சனசமூக நிலையம் இணைந்து செயற்பட்டன.

கடந்த மூன்று தினங்களாக வெள்ள நிவாரணப் பொருள்கள் சேகரிப்பு பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது பெறப்பட்ட நிதி மற்றும் பொருள்கள் ஒருங்கிணைக்கப்பட்டு சுமார் 5000 ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய உலருணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் தயார் செய்யப்பட்டு இன்று காலை எடுத்துச்செல்லப்பட்டு நேரில் வழங்கி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



















# திருப்பரங்குன்ற தீபம் ஏற்றும் விவகாரத்தில் 12 பேர் கைது, 8 பிரிவுகளில் வழக்கு பதிவு

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை திருப்பரங்குன்றம் கோயிலில் நவம்பர் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருக்கார்த்திகை தீபத் திருவிழா தொடங்கியது. வழக்கமாக உச்சிப் பிள்ளையார் கோயில் முன் தீபம் ஏற்றப்படும். இந்நிலையில், நடப்பாண்டு மலை உச்சியில் உள்ள தீபத் தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டது.

இதையடுத்து, திருப்பரங்குன்றம் முழுவதும் பொலிஸ் ஆணையர் லோகநாதன் தலைமையில் நேற்று பொலிஸார் குவிக்கப்பட்டனர். இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுப்படி மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றுவதற்குரிய நெய், காடாத்துணி போன்றவற்றை நேற்று முன்தினம் பிற்பகல் கோயில் பணியாளர்கள் கொண்டு சென்றனர்.

இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், பா.ஜ.க. மாநிலப் பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன் தலைமையில் ஏராளமானோர் திரண்டு, மாலை 5 மணியளவில் 16 கால் மண்டபம் முன் அமர்ந்து கந்த சஷ்டி கவசம் பாடினர். இதில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில், மாலை 6 மணியளவில் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பால தீபம் ஏற்றப்பட்டது. பின்னர் உச்சிப் பிள்ளையார் கோயில் முன்புள்ள தீபத்தூணில் மகா தீபம் ஏற்றப்பட்டது. ஆனால், மலை உச்சி தீபத்தூணில் தீபம் ஏற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற தகவல் பரவியது.

இதனால் அதிருப்தி அடைந்த இந்து முன்னணி, பா.ஜ.கவினர் மற்றும் பக்தர்கள் திரண்டு தீபத்தூணில் தீபம் ஏற்றக் கோரி கோஷமிட்டபடி, பொலிஸாரின் தடைகளை அப்புறப்படுத்தி 16 கால் மண்டபம் வரை முன்னேறினர்.

அவர்களைத் தடுக்க முயன்ற பொலிஸாருக்கும், இந்து அமைப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் பொலிஸார் உள்ளிட்ட சிலர் காயமடைந்தனர். பின்னர் தடைகளை மீறி "வீரவேல், வெற்றிவேல், முருகனுக்கு அரோகரா" என கோஷம் எழுப்பியவாறு கோயிலை நோக்கி ஏராளமானோர் சென்றனர். தொடர்ந்து பொலிஸாருடன் வாக்குவாதம், தள்ளுமுள்ளு என்று சிறிது நேரத்தில் அங்கு பரபரப்பு கூடியது. தொடர்ந்து அங்கு 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் 12 பேரை திருப்பரங்குன்றம் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் விஜய் கூட்டம் அனுமதி கோரி த.வெ.க. மனு



"ரோடு ஷோவுக்கு" அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், டிசம்பர் 9 இல் புதுச்சேரியில் விஜய் பொதுக் கூட்டத்துக்கு அனுமதி கோரி எஸ்.எஸ்பியிடம் த.வெ. கவினர் நேற்று மனு அளித்துள்ளனர்.

புதுச்சேரியில் த.வெ.க. தலைவர் விஜய் .ரோடு ஷோ. மூலம் மக்களை சந்திக்க அனுமதி கோரி த.வெ.கவினர் டி.ஜி.பி. அலுவலகத்தில் கடந்த வாரம் மனு அளித்தனர். ஆனால் பொலிஸ் "ரோடு ஷோவுக்கு" அனுமதி தரவில்லை.

இதையடுத்து, டி.ஜி.பி. அலுவலகத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகள், முதல்வர் ரங்கசாமியை அவரது வீடு மற்றும் சட்டப்பேரவை அலுவலகத்தில் ஐந்து முறை வரை பல நாள்களாக த.வெ.க. பொதுச் செயலர் புஸ்ஸி ஆனந்த் தொடர்ந்து சந்தித்தார். நடுவில் ஒருநாள் அவருடன் ஆதவ் அர்ஜுனாவும் வந்தார். ஆனால், பொலிஸ் கரூர் சம்பவம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கை சுட்டிக்காட்டி அனுமதி தரவில்லை.

நகர்பகுதி வழியாக விஜய் செல்லும் "ரோடு ஷோவை" மாற்றி ஈ.சி.ஆரில் ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவுக்காவது "ரோடு ஷோ" நடத்த புஸ்ஸி ஆனந்த், முதல்வர் ரங்கசாமியிடம் அனுமதி தர கோரினார். ஆனால், பொலிஸ் அதற்கு அனுமதி தரவில்லை.

ஐந்து முறை முயன்றும் "ரோடு ஷோவுக்கு" அனுமதி கிடைக்காமல் புஸ்ஸி ஆனந்த் திரும்பினார்.

இந்நிலையில், எஸ்.எஸ்.பி. கலைவாணனிடம் த.வெ.கவினர் பொதுக் கூட்டம் நடத்த அனுமதிக் கோரி கடிதம் அளித்தனர்.

அதில், எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி உப்பளம் துறைமுக மைதானத்தில் விஜய் பங்கேற்கும் த.வெ.க. பொதுக் கூட்டம் நடத்த அனுமதி தர வேண்டும் என குறிப்பிட்டிருந்தனர். இதில் காலை 7 முதல் மாலை 6 மணிக்குள் நேரம் ஒதுக்கி தரவும் கோரியுள்ளனர்.



# இந்தியா சென்ற விளார்டிமிர் புடினை மரியாதையுடன் வரவேற்றார் மோடி

இந்தியாசென்றுள்ளரஷ்யஜனாதிபதி விளார்டிமிர் புடினை, ஆயுதப் படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இந்த நிலையில், ஹைதராபாத் இல்ல அரங்கில் இன்று காலை உத்தியோக பூர்வ வரவேற்பு இடம்பெறும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பின்னர், இரண்டு நாட்டு தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்கும் 23 ஆவது ஆண்டு மாநாடு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டுக்குப் பின்னர் ரஷ்ய அரச தொலைக்காட்சி நிறுவனத்தின் புதிய இந்திய அலைவரிசையை, ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் தனியாகச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக கலந்துரையாடவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகவுள்ளன.







# காஸாவில் இஸ்ரேல் ஆதரவு பெற்ற கிளர்ச்சிப்படை தலைவர் மரணம்

காஸாவில் இஸ்ரேல் ஆதரவுப்பெற்ற கிளர்ச்சிப்படையின் தலைவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், தலைவர் யாசர் அபு ஷபாப் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஸாவில் பலஸ்தீன கிளர்ச்சியாளர்களான ஹமாஸ் படையை எதிர்கொள்வதற்கு இஸ்ரேல் உருவாக்கியதாகக் தெரிவிக்கப்படும் பாப்புலர் ஃபோர்ஸ் எனும் ஆயுதக்குழுவின் தலைவர்வர் தான் யாசர் அபு ஷபாப் என தெரிவிக்கப்படுகின்றது.

காஸாவில் பலஸ்தீனர்களுக்கு வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட உணவு உள்ளிட்ட அடிப்படை உதவிப் பொருள்களைத் திருடியதாகவும் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபட்டனர் எனவும் இவரது ஆயுதக்குழுவினர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காஸாவில் நேற்று ஆயுதக்குழுக்களுக்கு இடையில் நடைபெற்ற தாக்குதல்களில் யாசர் அபு ஷபாப் கொல்லப்பட்டார் என இஸ்ரேல் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர் கொல்லப்பட்டுள்ளார் என தெற்கு இஸ்ரேலில் உள்ள சொரோகா மருத்துவமனை உறுதி செய்துள்ளது.

இருப்பினும், யாசர் அபு ஷபாபின் மரணம் குறித்த முழுமையான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதயடுத்து, காஸாவில் ஹமாஸ்டன் இணைந்த பாதுகாப்புப் படையான ராடா படையினர், யாசர் அபு ஷபாபின் புகைப்படத்தை வெளியிட்டு “நாங்கள் உங்களிடம் ஏற்கெனவே சொன்னது, இஸ்ரேல் உங்களைப் பாதுகாக்காது” என தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, போதைப் பொருள் கடத்தல் குற்றத்திற்காக யாசர் அபு ஷபாப், ஹமாஸ் படைகளால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.









# மலையகத்தில் இ.தொ. காவின் நிவாரணப் பணி

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

அக்கரப்பத்தனை பிரதேச சபைக் குட்பட்ட ஊட்டுவெளி குரூப் பிரேம் மோர் பிரிவு, எல்ஜின் உள்ளிட்ட பல் வேறு தோட்டப் பகுதிகளில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார். தொடர்ந்து ஊட்டுவெளி குரூப் பிரேம்மோர் பிரிவு, எல்ஜின் உள்ளிட்ட பல்வேறு தோட்டப் பகுதிகளில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளையும் அவர் வழங்கி வைத்தார். அத்தோடு சேதமடைந்த வீடுகளையும் பார்வையிட்டார்.

நுவரெலியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் துயரத்தை பகிர்ந்து கொள்ளும் விதமாக ஜீவன் தொண்டமான் மேற்கொண்ட இந்த நிவாரணப் பணியில், இ.தொ.கா. தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், அக் கரப்பத்தனை பிரதேச சபை தலைவர் ரதிதேவி, உபத்தலைவர் சச்சிதானந்தன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் காரியாலய உத்தியோகத்தர்கள், இ.தொ.கா உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இணைந்து செயல்பட்டனர்.

மேலும், கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளையும் வழங்கும் செயற்பாடு மலையக பிரதேச பகுதிகளில் பாதிக்கப் பட்டவர்கள் அனைவருக்கும் எதிர்வரும் நாள்களுக்குள் முழுமையாக வழங்கி வைக்கப்படவுள்ளன எனவும், உதவி வழங்கிய நல்லுள்ளங்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதாக ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.









# விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் பிள்ளையார் பெருங்கதை

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர்தேவஸ்தானத்தில் பிள்ளையார்பெருங் கதை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

24ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கஜமுக சூரன் சங்காரம் இடம்பெறும். 25ஆம் திகதி வியாழக் கிழமை விநாயகர் சஷ்டி விரதபூஜை காலை 9 மணிக்கு இடம்பெறும் அதே வேளை, அன்றைய தினம் காலை 7 மணிக்கு திருவெம்பாவை பூஜை ஆரம்பமாகும்.

ஆலய பிரதமகுரு து.ஜெகதீஸ்வரக் குருக்கள், ஆலயக் குரு பிரம்மஸ்ரீ ம.யதீஸ் சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தி வைப்பர்.





கதிரவெளியில்...





# கிழக்கில் நிவாரண நடவடிக்கைகளில் சாணக்கியன்

கிழக்கில் கதிரைவெளி, வெருகல், மூதூர், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதி களில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாணக்கியன் கடந்த இரண்டு நாள்களாக நேரில் சென்று அவர்களுக்கான நிவாரண நடவடிக் கைகளை முன்னெடுத்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:–

கதிரவெளியில் இயற்கை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்டோம். வாகரை பிரதேச செயலாளர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தேன். இந்தப் பிரதேசத்தில் இருக்கும் மக்களை சரியான நேரத்திற்கு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சேர்த்து, உணவினை இந்த அதிகாரிகள் அளித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகளை அக் குடும்பங்கள் வீடு திரும்புகையில் தமிழரசுக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் தலைமையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் போது தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனும் கலந்து கொண்டார்.

அத்துடன் மாவிலாறு அணைக்கட்டு உடைந்து திருகோணமலையில் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அங்கு பாதிக்கப்பட்ட வெருகல் பிரதேச மக்க ளுக்கு நிவாரணங்களை வழங்கினோம். மேலும் பிரதேச வெருகல் பிரதேச சபை தவிசாளர் கருணாநிதியுடன் முகாம் களில் தங்கியுள்ள மக்களையும் பார்வை யிட்டோம். பிரதேச செயலாளருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் தமிழரசுக்கட்சி உறுப்பினர்

தொடர்ச்சி ▼

வெருகலில்...

























மூதூரில்...

# கிழக்கில் நிவாரண நடவடிக்கைகளில் சாணக்கியன்

**தொடர்ச்சி ▲**

களால் வழங்கப்பட்டன. நாமும் கலந்து கொண்டோம்.

திருகோணமலை மூதூர் பட்டித்திடல் மகா வித்தியாலய முகாமிற்கு சென்ற வேளையில் இராணுவமோ வேறு எந்த அதிகாரிகளும் தம்மை சந்திக்கவில்லை எனவும், கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் மாத்திரமே தம்முடன் களத்தில் நின்றனர் எனவும் மக்களால் சில குறைபாடுகள் எம்மிடம் முன்வைக்கப்பட்டன. தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், மூதூர் பிரதேச சபை தவிசாளர், உப்புவெளி பிரதேச சபை தவிசாளர், வெருகல் பிரதேச சபை தவிசாளர், தம்பலகாமம் உப தவிசாளர் போன்ற தமிழரசுக்கட்சியினை சேர்ந்தவர்களே படகில் வந்து உணவுகளை வழங்கினர் எனவும் மக்கள் தெரிவித்தனர். இது வரையிலும் அரசாங்கத்தினால் தமக்கான குடி தண்ணீர் கூட வழங்கவில்லை என விசனம் தெரிவித்தனர். அவர்களுக்கான வசதிகள் செய்வதற்குரிய ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தோப்பூர் பள்ளி குடியிருப்பு பிரதேசத்திற்கு பள்ளிக் குடியிருப்பு வட்டார உறுப்பினருடனும், மூதூர் தவிசாளருடனும் சென்றிருந்தோம். அங்கு மக்களை நாம் நேரில் சந்தித்து உரையாடினோம். அவர்களது தேவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நேற்றைய தினம் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்களால் அவர்கள் சேகரித்த நிவாரண பொருள்கள் அங்கு வழங்கப்பட்டுள்ளது.











பள்ளிக்குடியிருப்பில்...

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2025

## மேஷம்

இன்று மந்தமான நடவடிக்கைகள் காணப்படும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க உங்கள் உணர்ச்சிகளை கட்டுப் பாட்டில் வைக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் செயல்களை திறம்பட ஆற்ற இயலாது. சக பணியாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப் படுத்த இயலாது. உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. பணவரவு காணப்பட்டாலும் தேவையற்ற விஷயங்களுக்காக பண விரயம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

## ரிஷபம்

இன்று சாதகமான நாள். அனைத்–தும் எளிதாகவும் சுமுகமாகவும் நடை–பெறும். உங்களின் உறுதியான மற்றும் நேர்மறை அணுகுமுறை காரணமாக வெற்றி காண்பீர்கள்.

உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். பணியில் உங்கள் திறமை மற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும். இதனால் உங்கள் பிரியமனவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## மிதுனம்

இன்றுவளர்ச்சிகாணப்படும்.வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து கொள்வீர்கள்.புதிய அனுபவங்கள் மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் பணி யில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களில் பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந் துணர்வு ஏற்படும். இது உறவின் பிணைப்பை வலுப்படுத் தும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

நீங்கள் இன்று அமைதியாக இருக்க வேண்டும். அதனால் உங்கள் ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.

## கடகம்

இன்று திறமையாக செயலாற்ற முடியாது. சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. கவனமாப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழக வேண்டும். இன்று வேறுபாடுகளைக் களைந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நாள்.

இன்று குடும்பச் செலவுகள் அதிகமாக காணப்படும். பணத்தை சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும். செலவு களை கண்காணிக்க வேண்டும்.

உங்கள் தாய்க்கு வயிறு சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அவரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

## சிம்மம்

இன்று சுமுகமான பலன்கள் கிடைக் காது. உங்கள் செயல்களில் தடைகள் ஏற்படும். இதனால் அதிருப்தி உண்டா கும். தேவையற்ற விஷயங்களுக்கு கவலைப்படுவதை தவிர்க்க வேண்டி யது அவசியம்.

உங்கள் பணிகளை தரமாக ஆற்ற இயலாது. இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாகப் பேசுவீர்கள். உங்கள் கவனமற்ற பேச்சுகள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் வார்த்தைகளில் கவனம் தேவை.

பண வரவு குறைந்து காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் காணப்படும்.

குளிர்ச்சியான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். சளி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## கன்னி

இன்று உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்தி திருப்தி காண்பீர்கள்.

உங்கள் முயற்சியில் அர்ப்பணிப்பு காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களைப் பகிர்ந்து மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அவருடன் உங்கள் பொன்னான நேரத்தைக் கழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் வீட்டில் நடைபெறும் மங்களகரமான நிகழ்சிக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நீங்கள் திடமாகவும் வலிமையுடனும் காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று பொழுதுபோக்கிற்கு உகந்த நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

குறித்த நேரத்திற்குள் வேலையை முடிப்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரி களால் பாராட்டப்படும்.

உங்கள் துணையார் உங்களுக்கு ஆதரவாக இருப் பார். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் கையிருப்பு பணம் உங்களுக்கு போதுமானதாக இருக் கும்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் இருக்காது. இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## விருச்சிகம்

உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் வகையில் உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்களின் இலட்சியத்தை அடையலாம்.

அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். சரியாக திட்டமிட்டால் இந்த சவால்களை சமாளிக்கலாம்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் காணப்படும். இதனை தவிர்த்தல் வேண்டும்.மகிழ்ச்சியாக இருக்க இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வை வளர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பண இழப்பும் காணப்படுகின்றது. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.12.2025




இன்று குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் சில வெறுப்பான சூழ்நிலைகள் உருவாகும். என்றாலும் தெளிவான எண்ணங்களை கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாகவும் நம்பிக்கையுடனும் இருக்கலாம்.

பணியிடத்தில் ஏமாற்றமான சூழ்நிலை காணப்படும். பணியில் உங்கள் செயல்திறன் அதிருப்தியை அளிக்கும். பணியிடச் சூழ்நிலை காரணமாக வேறு வேலைக்கு மாற நினைப்பீர்கள்.

உங்கள் குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம்.




இன்று பொறுமை இழக்க வாய்ப்புள்ளதால் அமைதியாகவும் கட்டுப்பாடனும் இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

குறித்த நேரத்தில் பணி முடிப்பது சற்று கடினமாக இருக்கும். கூடுதல் பணிகளை சமாளிக்க கூடுதல் முயற்சி தேவை.

உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க கவனமாக பழக வேண்டும். இதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படும்.

பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு குறைவு. போதிய அளவு சம்பாதித்தாலும் குடும்பத்திற்காக செலவு செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப் படலாம்.




உங்கள் புத்திசாலித்தனத்தினால் இன்று முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். சுயமாக முன்னேறுவீர்கள். உங்களின் இனிமையான வார்த்தை மூலம் பிறரை திருப்தி படுத்துவீர்கள்.

பணி நிமித்தமான சிறிய பயணம் ஒன்று நேரலாம். இந்தப் பயணம் பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அன்பான உறவுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் வாழ்க்கைத் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று செய்யும் செயல்கள் யாவற்றிலும் பொறுமை தேவை. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் எளி-தாக அணுகலாம். தெய்வீக பாடல்களை கேட்பதன் மூலம் உங்களுக்கு திருப்தியும் ஆறுதலும் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் புத்திசாலித்தன த்தை பயன் படுத்தி வெற்றி பெறுவீர்கள் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க மகிழ்ச்சியை தக்க வைக்க விட்டுகொடுத்து செல்ல வேண்டும்.

பண வரவு இன்று திருப்திகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.



# கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளரினால் உறுப்பினர்களுக்கு மிரட்டல் எனக் குற்றச்சாட்டு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் உறுப்பினர்களை மிரட்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன

மிரட்டும் வகையில் அவர் கருத்து வெளியிட்டார் எனக் கூறப்படும் பதிவில், 'தவிசாளருக்கு முழு அதிகாரம் உள்ளது. நிறுவனத் தலைவர் என்ற அடிப்படையில் எந்த வட்டாரத்தில், எங்கு வேலை நடைபெற வேண்டும் என்பதை நான்தான் முடிவு செய்வேன், நீங்கள் சின்னப்பிள்ளைத்தனமாக சேறு பூசும் அரசியலை செய்வீர்களானால், நீங்கள் அனைவரும் காணாமல் போய் விடுவீர்கள்' எனக் கூறப்படுகின்றது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சின்னராசா லோகேஸ்வரன் சபை உறுப்பினர்களிடம் இப்படிக் கடும் தொனியில் மிரட்டினார் என உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு நேற்றையதினம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மிரட்டும் விதமாக கூறிய அவரது உரையைக் கொண்ட ஒடியோ பதிவும் தற்போது வெளியாகியுள்ளது.

தற்போது நிலவும் மோசமான காலநிலையால் மக்கள் போக்குவரத்து, உணவு, குடி தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளில் சிரமங்களை எதிர்கொண்டு வரும் சூழலில், பிரதேச சபைத் தவிசாளரின் இத்தகைய கருத்துக்கள் உறுப்பினர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எங்கள் பாதுகாப்பு, நலன் தொடர்பாக தவிசாளர் தன்னிச்சையான அதிகாரப் பயன்பாட்டின் அடிப்படையில் எங்களை அச்சுறுத்துவது ஏற்க முடியாதது என சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.